செ.வெ.எண்: 48 நாள்: 30.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடம் ஒன்றிய பகுதிகளில் ஏரிகள் ஆழப்படுத்தப்படவுள்ள பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் **தாய் திட்டத்தின் கீழ்** ஏரிகளை ஆழப்படுத்தப்படவுள்ள பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (30.03.2017) நேரில் ஆய்வு செய்தார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் **ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில்** அங்கராயநல்லூர் ஊராட்சியில் உள்ள காப்பாகுளம், பெரியவளையம் ஊராட்சியிலுள்ள அரங்கன் ஏரி மற்றும் வெட்டியார்வெட்டு ஊராட்சியிலுள்ள புலிவனம் ஏரி ஆகிய ஏரிகளையும், **ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில்** கூவத்தூர் கிராமத்தில் உள்ள கஸ்தூரிஜயர் குளம் மற்றும் காட்டாத்தூர் கிராமத்தில் உள்ள ராவுத்தன் ஏரி, பெரியகிருஸ்ணாபுரம் கிராமத்தில் உள்ள சின்ன ஏரி ஆகிய ஏரிகளை 2016- 17ஆம் ஆண்டிற்கு **தாய் திட்டத்தின் கீழ் தூர் வாரவும், கரைகளை பலப்படுத்தவும், ஆழப்படுத்தப்படவும்** உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், தண்டலை ஊராட்சியில் மழைநீர் சேகரிக்கும் வண்ணம் **மங்கலம் ஏரி** தூர்வாரப்பட்டு கரைகள் அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் பார்வையிட்டார்.

இவ்வாய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திட்டம் திருமதி.லோகேஸ்வரி, செயற்பொறியாளர் திரு.செல்வகுமரன், உதவி செயற்பொறியாளர்கள் சுப்ரமணியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.தமிழரசு, மணிமொழி (ஜெயங்கொண்டம்), திரு.செந்தில், சேகர் (ஆண்டிமடம்), ஒன்றியப்பொறியாளர்கள், ஒன்றிய பணி மேற்பார்வையாளர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.